**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.65/2024 – PW-4**

| | |
|---|---|
| Name | திருமதி.காயத்திரி |
| Husband/Father Name | பிரசாந்த் |
| Village /Area | காவேரிப்பாக்கம் |
| Taluk | நெமிலி |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 29 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.07.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளித்த அசா.1 மற்றும் அசா.3 எனது சகோதரி அசா.2 எனது தாயார் ஆவார். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். 09.07.2021 அன்று இரவு 10.30 மணியளவில் நாங்கள் அனைவரும் தூங்கிக்கொண்டிருக்கும் போது எனது சகோதரி கனிமொழி என்பவர் அவருடைய மகன் கபிலேஷிற்கு இரத்த காயம் ஏற்பட்டிருப்பதாக குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடிவந்தார். நாங்கள் பார்த்த போது குழந்தை கபிலேஷின் தலையில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவரை அங்கிருந்த இராம்குமார் எனது கணவர் பிரசாந்த் அருகில் உள்ள புதுப்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்கு வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர் அங்கு சிகிச்சை பலனளிக்காததால் கபிலேஷ் இறந்து விட்டதாக கூறினார்கள். நானும் எனது கணவரும் தற்போது

ஒன்றாக தான் வாழ்ந்து வருகிறோம். போலீசார் இது குறித்து என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : எதிர் தரப்பு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்./–திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**